ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1880/9 - 2014 සැප්තැම්බර් මස 16 වැනි අඟහරුවාදා - 2014.09.16

1880/9ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 16 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்

### 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

எனது இல: Co/Prala/LA/3/79/UDA.

பொதுமக்கள் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கி றார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்ட வாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

மேல் மாகாணத்தில் கொழும்பு மாவட்டத்தில் கொழும்பு பிரதேச செயலாளர் பிரிவிற்கு உட்பட்ட கொழும்பு மாநகரசபை எல்லையுள்ளான; வட்டார இல. 20, கோட்டையிலானதும் நில அளவையாளர் நாயகத்தால் 28.08.2014 ஆந் திகதியிடப்பட்டு தயாரிக்கப்பட்ட பூர்வாங்க மாதிரிப்பட இல. 9480 இல். காட்டப்பட்ட காணித்துண்டு இல. 1 ஆனது 0.2397 ஹெக். விஸ்தீரணத்தை கொண்டுள்ளது.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் கொழும்பு பிரதேச செயலகத்தில் நேராகவோ அல்லது எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட முகவர்கள் மூலமோ 2014 ஆம் ஆண்டு நவெம்பர் 17 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு கொழும்பு பிரதேச செயலகத்தில் என்னை சந்திக்குமாறு வேண்டுகின்றேன். அத்துடன், அக்காணி வசதியுரிமையில் கொண்டுள்ள அக்கறையின் தன்மை, குறிப்பிட்ட எடுக்கவிருக்கும் காணி வசதியுரிமைகளுக்கு நட்ட ஈட்டு கோரிக் கைகளின் விபரங்களையும் நட்ட ஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங் களையும் 2014, நவெம்பர் 10 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படி இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

டி.பி. விக்கிரமசிங்ஹ,
பிரதேச செயலாளர்,
கொழும்பு.

பிரதேச செயலகம்,
கொழும்பு,
2014, செத்தெம்பர் 15.

10 - 83